StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**SUMMATIVE ASSESSMENT - II ( 2012-2013 )**

Time : 3 hours | Tamil | Marks : 90

நேரம் - 3 மணி | தமிழ் | மதிப்பெண்கள் - 90

**Class : VII** | பகுதி - 1 | ஏழாம் வகுப்பு

அ ) கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நான்கு திசைகளிலும் கலையழகு பொருந்திய மாபெருங் கோபுரங்களோடு எட்டுச் சிறிய கோபுரங்களையும் கொண்டு எழில் மிகு சிற்பக் கலைக்கூடமாக விளங்கும் கோவில் மாநகர், மதுரை. பழம்பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்தமையால் தென்னிந்தியாவின் ஏதென்ஸ் எனப் புகழப்படுகிறது. சங்கம் வைத்துச் செந்தமிழ் வளர்த்த நகரம், முன்பு பாண்டியர்களின் தலை நகரமாக விளங்கிய நகரம்,இன்றைய தமிழகத்தின் இரண்டாவது பெருநகரம் என்றும் தனிச்சிறப்புகளை உடையது மதுரை மாநகர்.கன்னிகோவில், கரியமால் கோவில்,காளி கோவில்,ஆலவாய்க் கோவில் ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்குக் காவலாக அமைந்தமையால்,நான்மாடக்கூடல் என்னும் பெயர் பெற்று விளங்குகிறது. மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் மருதை என வழங்கிய இடம் காலப் போக்கில் மதுரை என்றாகியது. கல்வெட்டில் மதிரை என்ற பெயர் காணப்படுகிறது. இளங்கோவடிகள் தமது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் ஓங்குசீர் மதுரை, மாண்புடை மரபின் மதுரை, வானவர் உறையும் மதுரை எனப் பற்பல அடைமொழிகளால் மதுரைக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தார்.

<u>வினாக்கள்</u> **10**

1 ) தென்னிந்தியாவின் ஏதென்ஸ் எனப் புகழப்படும் நகர் எது? ஏன் அவ்வாறு புகழப்படுகிறது ?

2 ) மதுரையின் தனிச்சிறப்புகளை எழுதுக.

3 ) மதுரை நான்மாடக்கூடல் என்னும் பெயர் பெறக் காரணம் யாது ?

4 ) மதுரை என்னும் பெயர் எவ்வாறு ஏற்பட்டது ?

5 ) கல்வெட்டில் மதுரைக்கு வழங்கும் பெயர் யாது ?

அ) மருதை ஆ) கூடல் இ) மதிரை ஈ ) கோவில் மாநகர்

6 ) மாண்புடை மரபின் மதுரை எனப் புகழ்ந்தவர் யார் ?

அ) இளங்கோவடிகள் ஆ ) கோவூர் கிழார் இ) சாத்தனார் இ ) கூத்தர் பெருமான்

ஆ ) கட்டுரை எழுதுக. **10**

நூல் நிலையம்

இ ) கடிதம் எழுதுக. **10**

குடிநீர் வசதி செய்து தர வேண்டி பஞ்சாயத்துத் தலைவருக்கு பொது விண்ணப்பம் எழுதுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி - 2

அ ) பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1 ) மரபுச்சொல்

அ) ஆட்டுப்பட்டி ஆ) சிங்கக்குட்டி இ) தீ வை ஈ) யானைக்குட்டி

2 ) சினைப்பெயர்

அ) வெள்ளையன் ஆ) திருடன் இ) கபாலம் ஈ) கருங்குயில்

3 ) பிற மொழிச் சொல்

அ) அகங்காரம் ஆ) முறைகேடு இ) மனக்குறை ஈ) பத்து

ஆ ) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. 3

4 ) பெயர்ச்சொல் _____________ வகைப்படும்.

அ) எட்டு ஆ) ஆறு இ) ஐந்து ஈ) ஏழு

5 ) முதல், இடை, கடை எழுத்துகள் மாறி வந்தும் பொருள் மாறாமல் நிற்பது _________________ .

அ) முதற்போலி ஆ) இடைப்போலி இ) கடைப்போலி ஈ) முற்றுப்போலி

6 ) தை - என்பது _______________ .

அ) பண்புப்பெயர் ஆ) இடப்பெயர் இ) காலப்பெயர் ஈ) தொழிற்பெயர்

இ ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

7 . நிலா ( பண்புப்பெயர் சேர்த்து எழுதுக )

அ) வட்ட நிலா ஆ) வெண்ணிலா இ) சந்திரன் இ) திங்கள்

8 . தாழை ( தாவர உறுப்புப் பெயரை எழுதுக )

அ) தாழை இலை ஆ) தாழை ஓலை இ) தாழைக்கீற்று ஈ) தாழை மடல்

9 . புறா ( ஒலி மரபுச் சொல்லை எழுதுக )

அ) புறா முரலும் ஆ) புறா குனுகும் இ) புறா அகவும் ஈ) புறா கொஞ்சும்

ஈ ) பொருத்தமான இலக்கணக்குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

10 . மைஞ்சு

அ) முதற்போலி ஆ) இடைப்போலி இ) கடைப்போலி ஈ) முற்றுப்போலி

11 . இலை

அ) மரபுச்சொல் ஆ) பிற மொழிச்சொல் இ) சினைப்பெயர் ஈ) பொருட்பெயர்

12 . முன்றில்

அ) ஈற்றுப்போலி ஆ) முன்பின்னாகத் தொக்கப்போலி

இ) இடைப்போலி ஈ ) முற்றுப்போலி



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

உ ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

13 . அ ) ஐதீகம் - என்ற சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் சடங்கு.
ஆ) ஐதீகம் - என்ற சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் நலம்.
இ) ஐதீகம் - என்ற சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் எல்லாம்.
ஈ) ஐதீகம் - என்ற சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் திருமணம்.

14 . அ) சோள ஓலை.
ஆ) சோள இலை.
இ) சோளத்தட்டை.
ஈ) சோளக்கூந்தல்.

15 . அ) பால் பருகு என்பது மரபு வழு ஆகும்.
ஆ) பால் பருகு என்பது மரபு பிழை ஆகும்.
இ) பால் பருகு என்பது வினை மரபு ஆகும்.
ஈ) பால் பருகு என்பது ஈற்றுப்போலி ஆகும்.

## பகுதி - 3

அ ) பொருள் தருக. 5

1 ) நெஞ்சுரம் = ______.
2 ) கொற்றவன் = ______.
3 ) கவளம் = ______.
4 ) முற்றுகை = ______.
5 ) இறைவை = ______.

ஆ ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. 5

1 ) நல்வழி ( எதிர்ச்சொல் தருக )
2 ) சுவைமிக்க ( சொற்றொடரில் அமைத்து எழுதுக)
3 ) உள் + பூசல் ( சேர்த்து எழுதுக )
4 ) புதிதன்று ( பிரித்து எழுதுக )
5 ) நிரப்புக.
கேரள மாநிலத்தில் உள்ள ___________ ஆடுகள் அதிகமாகப் பால் தரக்கூடியவை.

இ ) பொருத்துக. 5

| | | |
|---|---|---|
| 1 ) இடித்துரைத்தல் | = | புகழுடன் விளங்குதல் |
| 2 ) ஏட்டுச் சுரைக்காய் | = | விடாப்பிடி |
| 3 ) கரைத்துக்குடித்தல் | = | கண்டித்து அறிவுரை கூறுதல் |
| 4 ) கொடி கட்டிப்பறத்தல் | = | நடைமுறைக்கு ஒவ்வாதது |
| 5 ) குரங்குப்பிடி | = | முழுமையாகத் தெரிந்து கொள்ளல் |



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

ஈ ) **கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

நலங்கிள்ளி! அதைவிடப் பெரும்பழி உன்னால் சோழர்குடிக்கு வரப்போகிறதோ என அஞ்சுகிறேன். போர்க்களத்தில் நீ இப்பொழுது எதிர்த்து நிற்கிறாயே, யாரை? விற்கொடி கொண்ட சேரனா ? மீன்கொடி கொண்ட பாண்டியனா? இல்லையே! நெடுங்கிள்ளி உன் குடிப்பிறந்தவன். நீங்கள் இருவருமே சோழர்கள். உங்கள் இருவரில் எவர் தோற்றாலும் சோழன் தோற்றான்! என்றுதான் கூறுவார்கள். இந்தப் பழியானது சோழர் குலத்தைத்தானே சாரும்.உங்களுக்கு இப்பகை தேவையா?

<u>**வினாக்கள்**</u> **5**

1. **உங்களுக்கு இப்பகை தேவையா? என்று கேட்டவர் யார்?**

   அ) நலங்கிள்ளி ஆ) நெடுங்கிள்ளி இ) கோவூர் கிழார்

2. **மீன்கொடி கொண்டவன் யார் ?**

   அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன்

3. **நெடுங்கிள்ளி எக்குடியில் பிறந்தவன் ?**

   அ) சேரர்குடி ஆ) சோழர்குடி இ) பாண்டியர்குடி

4. **சேரனின் கொடி எது ?**

   அ) விற்கொடி ஆ) புலிக்கொடி இ) மீன்கொடி

5. **நெடுங்கிள்ளியை வென்றவர் யார் ?**

   அ) நலங்கிள்ளி ஆ) இளந்தத்தனார் இ) நெடுஞ்சேரலாதன்

உ ) **ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **10**

1 ) யானை உண்ணும்போது சிந்தும் உணவு எதற்குப் பயன்படுகிறது ?

2 ) புலவர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கோவூர்கிழார் கூறியவை யாவை?

3 ) நெல்வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

4 ) நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பணிகள் இரண்டினை எழுதுக.

5 ) முழுதும் கற்றுவிட்டோம் என்று செருக்கடையக் கூடாது.ஏன் ?

6 ) புலவர் இளந்தத்தனார் யாரால், எதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார்?

ஊ) **ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** **10**

1 ) காடையின் நுண்ணறிவு.

2 ) விகடகவி தெனாலிராமன்.

எ ) **அடி பிறழாமல் எழுதுக.** **5**

* **மெய்வருத்தம்** .... எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கம் பாடலை எழுதி அதன் **ஆசிரியர்** பெயரைக் குறிப்பிடுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers